மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.103/2023

2026ம் ஆண்டு ஜூன் 18ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

18.06.2026 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் திருப்பூர் வடக்கு வட்ட துணை ஆய்வாளராக நான் பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பானை அடிப்படையில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்றேன். நான் கடந்த 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரை காங்கேயம் தாலுகாவில் வட்ட துணை ஆய்வாளராக பணிபுரிந்தேன். இந்த வழக்கின் வாதி தாவா சொத்தை அளவீடு செய்ய எங்கள் அலுவலகத்தில் மனு கொடுத்ததில் வட்ட சார் ஆய்வாளரால் தாவா சொத்தை அடையாளம் காண இயலாத காரணத்தினால் நான் அவரோடு சென்று தாவா சொத்தை அடையாளம் செய்து கொடுத்தேன். 10.03.2023 தேதியில் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த வட்டசார் ஆய்வாளர் திரு.மு.சீனிவாசன் என்பவர் தாவா சொத்தை அளவீடு செய்து அதற்கான வரைபடத்தை கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வரைபடம் அவர் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து அவருடையது. தான் அவர் தற்போது திருப்பூர் வடக்கு வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.06.18 18:52:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.